3.630

# ரத்தாய்



3.630

ரவன் தோன்றிடு போது
ம்மலர்ப் போது திறந்து
ரணப் புன்னகை பூக்கும்
ம! என்னுள்ளம் கொள்ளைகொள் அன்பே!"

—சொக்கன்

★

பிரசுரம்:
**கலாபவனம்**
பருத்தித்துறை

# வீரத்தாய்

(கதைப்பாடல்)

193, K. K. S. ரோட்,
யாழ்ப்பாணம்.

யாத்தவர்

'சொக்கன்'

8.5.65

★

பிரசுரம்:

கலாபவனம் — பருத்தித்துறை

முதற்பதிப்பு புரட்டாதி 1958.
(உரிமை ஆசிரியர்க்கு)

இந்நூல் வருவாயின் அரைப்பங்கு அர்ச். யோண். கல்லூரிக் கலாவிருத்திச் சங்கத்திற்கு உரித்து.

விலை சதம் 60

அச்சுப்பதிவு: கலாபவன அச்சகம் - பருத்தித்துறை

# என் கூற்று

கற்பனைக் கடலில் மூழ்கிக்
கவிதையாம் மணியைப் பெற்றுப்
பொற்புறு தமிழ்த்தாய் மேனி
புளகிதம் அடையப் பூட்டும்
கற்றநற் புலவர் கூட்டிற்
கடையனேன் சேரேன் உள்ளம்
உற்றபேர் ஆசை தூண்ட
ஒருசிறு காதை செய்தேன். (1)

தேனுயர் மொழியாற் பாடல்
செய்தனன் இளங்கோ, பின்னர்
வானுயர் புகழைப் பெற்றான்
வளமுறு கவியாற் கம்பன்,
கூனியோர் நிமிரப் பாடல்
பாரதி தந்தான். வீணில்
யானுமின் றொன்று செய்தேன்
யாவரே நகையார் என்னை. (2)

எனினும்,

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்". — குறள்.

க. சொக்கலிங்கம்
"சொக்கன்"
அர்ச். யோண். மொஸ்கோ கல்லூரி
அட்டன்
5.9.58

# மதிப்புரைகள்

## பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை

அவர்கள் எழுதுவது.

என்னிடம் ஒரு இளம்ஆசிரியர் இடையிடையே நீண்ட லீவுகாலங்களில் வருவதுண்டு. அவர்கையில் அவரது சொந்தக் கட்டுரை கவிதை, குட்டி நாடகம் யாதாவது தவருதிருக்கும். அவர் ஒரு சிறு மேடை நடிகருமாவார். தாய்நாட்டுப்பற்றுமிக்க வீரம் சிறந்த பாத்திரங்களாக உணர்ச்சியுடன் நடிப்பதில் அவர் வல்லவர். வீரசங்கிலியன், கட்டப்பொம்மன், மராட்டியசிங்கம்சிவாஜி போன்ற வீரர்கதை அவர் நாவிலே தாண்டவமாடும். சில தினங்களுக்குமுன் அவர் கடதாசிக் கட்டொன்றுடன் தோற்றினர். ஏதோ பெரிய நாடகம் கொண்டு வருகிருர், என நினைத்து வரவேற்றேன். தம்கையிலிருந்ததை என்னிடம் தந்தார். பலபாடல்களாகிய நூலாக அஃதிருப்பதைக்கண்டேன். "பாடல்களைப் பத்திரிகையிற் பிரசுரிப்பது அவர்நோக்கமா?" என வினவினேன். தாம் அதனைச் சிறுநூல் வடிவில் வெளிப்படுத்தப் போவதாகக் கூறினர். மிக்க உயரிய செந்தமிழ்ச்செல்வங்களாகிய சங்கநூல்களும், ஏனைய பிற்கால நூல்களும் மலிவுப்பதிப்புக்களாக வெளிவரும் இக்காலத்தில அவரது "நூலைப்படிப்பதற்கு யாரைத்தேடிப் பிடிக்கப் போகின்ருரோ," என்றேன். உயரிய நூலைப்படிப்பவர் படிக்கட்டும். நன்றே சுவைத்துப்படித்து தமிழ் இன்பத்திலேதிளைக்கட்டும் தமது நூலுமச்சாகட்டுமென்று கூறியவர் புறநானூற்று வீரத்தாயைப் பற்றிய பாடலின் அடிப்படையிலே தாமும் ஒரு சிறுகதைபோலச் சுலபமாகப் பாடல்கள் ஆக்கியிருப்பதால் இலக்கியம்

கற்க ஆரம்பிப்பவருக்குத் தமது நூல் ஒருசிறு தள்ளு வண்டியாக இருப்பதாகக்கூறிப் பாக்களைப்படிக்குமாறு மீண்டும் ஏவினர். நல்ல ஒழுகோசையில் அமைந்த பாடல்கள் மனத்தைக் கவர்ந்தன. சந்தர்ப்பங்களுக்கேற்ற பல சந்தங்களில் அவர் பாடல்களமைந்து உளத்துக்கு மகிழ்ச்சியையும் ஊட்டும் முறையில் அமைந்திருப்பக் கண்டேன். இலக்கியப் பயிற்சியுள்ளோருக்குப் பொழுதுபோக்காகவும், ஆரம்பப் படியிலுள்ளவருக்கு வழிகாட்டியாகவும் அமைந்துள்ள இச்சிறு நூற்பாடல்கள் தமிழ்ப்பூங்காவில் உயர்ந்து நிற்கும் சந்தன சண்பகதருக்களுக்கும் பிச்சி, வெட்சி, முல்லைக்கொடிகளுக்கும் பக்கலில் நின்று தம்மளவில் அப்பூங்காவிற்கு வனப்புக் கொடுக்கும் கருங்காக்கணம்பூப்போல் அமைந்திருப்பதனை, தமிழ் வாசகர்கள் இத்தாய்மொழிப்பற்று மிக்க இளைஞருக்குப் போதிய ஊக்கமூட்டுவார்களாக- குன்றா இளமைத்தமிழரசியின் வளம் பல்வழியினும் நன்றே ஓங்குக.

பொ. கிருஷ்ணபிள்ளை

பலாலி அரசினர் பயிற்சிக்கலாசாலை | தமிழ்ப்பண்டிதர்

# திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள்
## (யாழ்ப்பாணன்) எழுதுவது

அன்பர் க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் வளரும் எழுத்தாளர்; கவிஞர். அன்னர் எழுதிய "வீரத்தாய்" என்னும் பழமையோடு புதுமையுமிணைந்த கவிதை நூலைப் பார்வையிட்டேன். நூற்றியிருபத்து இரண்டு பாடல்களடங்கிய இச்சிறுநூலிற்தான் எத்தனை தோற்றம் - எத்தனை நடை - என்ன அழகான சொல்லடுக்குகள். ஓரிடத்தில் இளங்கோ, ஓரிடத்திற் கம்பன், ஓரிடத்திற் சேக்கிழார் எல்லோருடைய செய்யுள் நடைகளும் இந்நூலிற் காண்கின்றோம்.

"வளரும் பயிர்க்கு உயிராகி வாழும் மக்கட் குணவாகி
உளத்தா லுயர்ந்த புலவோர்க்கு ஒண்மைக் கவிதேர் கனவாகிக்
களங்காண் வீர மறவர்களின் களியூட் டன்னை தானுகி
இளமை ஒண்மை மாருது எழிலோ டுறையும் காவேரி"

எனக் காவேரி அன்னையின் எழிலைச் சித்திரிக்கும் பாடலுக்குத்தான் என்னத்தை ஈயலாம்? அன்பர்கள், ஆதரவாளர்கள் பொன்னைக் கொடுங்கள். அல்லது அன்போடு ஒரு நூலேற்று அதன் கிரயமான பொருளைக் கொடுங்கள்.

கலைஞர்கள் வாழல் வேண்டும் கவிஞர்கள் வாழல் வேண்டும்
நிலமிசை பொன்னை யள்ளி நிதமுந்தா மீதல் வேண்டும்
மலையெனக் கலைக ளோங்கி வளரும்நம் மொழியிற் றேங்கி
உலகில்நம் தமிழ னென்றே தோள்கொட்டி யுய்தல் வேண்டும்.

கலாட்வனம்,
பேலைப்புலோலி, பருத்தித்துறை.

வே. சிவக்கொழுந்து
(யாழ்ப்பாணன்)

## முன்னோர் மொழிபொருள்

"1. .............................................
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறைகேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகனல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

ஒக்கூர் மாசாத்தியார் (புறம். 279)

2. நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

காக்கைப் பாடினியார் நற்செள்ளையார் (புறம். 278)

## வீரத்தாய்

உரித்தாக்கல்

மானமே உயிராய் மதித்திடும் வீரர்,
மனவலி தோள்வலி உடையோர்,
ஈனமே அணையின் உயிரையுந் தந்தே
இணையிலாப் பெரும்புகழ் பெறுவோர்,
தானமும் தவமும் தளைத்தநல் நெஞ்சர்,
தமிழையே மூச்சதாய் உயிர்ப்போர்,
வானமே பெயர்ந்தும் உறுதியிற் பெயரார்
வாழ்வரேல் நூலிது அவர்க்கே.

# வீரத்தாய்

காப்பு

கன்னற் றமிழ்ப்பாகிற் கண்டாய் விளைந்திடுமாம்
உன்னும் நினைவே உயிரூட்டும் — பன்னரிய
தொல்லோர் அளித்தநூற் றேய்ந்தே களிகொள்ளும்
நல்ல கலைவாணி நாடு.

## நூல்

### 1. சோழநாட்டின் சிறப்பு

கால வெல்லை கடந்து நிலைப்பது
ஞால மெங்கும் இசைபரந் திட்டது
சால வும்உயர் வீரர் பெருத்தது
கோல நற்றமிழ் பேசுமோர் நாடிதே. (1)

நாடெனிற் றமிழ் நாடெனக் கூறவும்
கோடெனிற் பெரும் வேங்கட மென்னவும்
ஓடு மாறெனிற் பொன்னியென் றோதவும்
நாடு வார்புல வோரிந்த நாட்டிலே. (2)

மூவ ராகிய வேந்தரில் முன்னவர்
பாவ லர்புகழ் தேடிஅடை பவர்
சாவைத் தூசெனக் கூறிடும் வீரர்கள்
காவலர் உறை சோழநன் னாடிதே. (3)

களவு கற்பெனும் காதலர் வாழ்க்கையும்
விளைவு செய்துயர் வேளிரின் வாழ்க்கையும்
உளைவிலா வணி கர்பெரு வாழ்க்கையும்
களைகண் அற்றிடச் செய்திடும் தீமையை. (4)

வானம் துஞ்சும் பெருமனை ஈங்கிலை
ஈனமாம் சிறு கொட்டிலும் ஈங்கிலை

ஊனமாய்க் குருடாய் உயிர்ப்பா ரிலை
ஞானமும் அன்பும் நல்லர சோச்சலால். (5)

வேந்த னேஉயி ராய்க்குடி மெய்யதாய்ப்
பாந்த மும்பரி வும்மிக்கு வாழ்தலாற்
சாந்த மாய்அருள் வாழ்வினி லொன்றுவர்
போந்த வர்விருந் தின்பொருள் தேருவார். (6)

ஒன்னலர்க் கிடி யாகியும் அன்பர்க்குக்
கன்னலின் இனி தாகியும் காட்டியே
பன்னரும் புகழ் பாலித்து நின்றிடும்
மன்னவர் பலர் வாழ்ந்தவொர் நாடிதே. (7)

## 2. பொன்னியின் சிறப்பு

வான மீந்ததாம் மழையின் தாரையைத்
தான மீந்திடும் பொன்னி அன்னையால்
கான மும்பொழில் வயல்களும் நிலைத்(து)
ஊன மில்உழ வோங்கி நின்றிடும். (8)

கோழை இங்கிலை, கொலைஞர் இங்கிலை
ஏழை இங்கிலை, இழிவு இங்கிலைச்
சோழ நாடிது சொர்க்க நாடென
நாளும் இன்னிசை நவிலும் காவிரி. (9)

பாடி வந்திடும், தேடி மைந்தர்கள்
ஓடி வந்துமே துளைவர் நீரினைக்
கோடி பொன்னிலும் உயர்வு காவிரி
நாடி வந்தவர்க் கமுது நல்குமே. (10)

காலம் யாவினும் ஓடி ஓடியும்
வாலை யாகவே ஒளிரும் தன்மையால்
சால நற்புகழ்த் தமிழை ஒப்பளே
ஞால மோங்கிய நங்கை காவிரி. (11)

வேறு

கன்னற் பொழிலும் கனவயலும்
கவினார் கமலக் குளங்களுமே
உன்ன அரிதாம் வளத்தோடு
உயர்ந்த எழிலும் பெற்றிடுமே
அன்னை வளமார் காவிரியின்
அன்புக் கைகள் அணைப்பதனால்
இன்ன நிலையும் இவற்றிற்கென்(று)
எண்ணி மகிழ்வர் சோணாட்டார். (12)

வளரும் பயிர்க்கு உயிராகி
வாழும் மக்கட் குணர்வாகி
உளத்தால் உயர்ந்த புலவோர்க்கு
ஒண்மைக் கவிதேர் கனவாகிக்
களங்காண் வீர மறவர்களின்
களியூட் டன்னை தானாகி
இளமை ஒண்மை மாறாது
எழிலோ டுறையும் காவேரி. (13)

### 3. சாத்தனும் மலர்விழியும்

காவிரிக் கரையே ஆங்கே
கவினுறு சிற்றூர் தன்னில்
மேவியே வாழ்வான், அன்பு
மிக்கவன், உழவுச் செல்வன்
ஆவியே செலினும் தாய்நாட்
டன்பினிற் றளரா நெஞ்சன்,
ஓவிய அழகன், சாத்தன்,
ஒளிறுவாட் சமரில் வீரன். (14)

போர்நிலம் வயலே யாகப்
புலவுசேர் வேலே நாஞ்சில்

போரெதிர் பகைவர் தந்த
தலைகளே நாருய்க் கொண்டு
சோரியை நீராய்ப் பெய்து
சோர்விலா துழவு செய்து
வீரனும் சாத்தன் வெற்றிக்
கதிரினை அறுவை செய்வான். (15)

துன்னலர்க் காலன் என்றால்
துணைவர்க்கோ அமிர்தம் அன்னன்
கன்னியர் நெஞ்சைக் கவ்வும்
காளையாம் சாத்தன் என்றும்
தன்னுள உறுதி மாருன்,
பெண்டிரைத் தாயாய்க் கொள்வோன்.
இன்னலம் பலவும் பெற்றேன்,
இளமையின் வாயில் நின்ருன். (16)

இசைநிறை சாத்தன் வாழ்க்கை
இங்ஙனம் அமைந்த தாக
வசையறு குலமும் அன்பும்
வள்ளன்மை தானு மாக
நசையற வுயர்ந்தோன் நல்லான்
குடியினில் வந்தாள் செல்வி
திசையெலாம் போற்றும் நங்கை
மலர்விழி என்னும் பேராள். (17)

நன்மலர் அளித்த மென்மை
நகைமுல்லை தந்த பற்கள்,
தென்றலிற் பெற்ற மேனி
தேனினிற் கிடைத்த சொற்கள்
மின்னலிற் பெற்ற தாமோர்
மிகச்சிறு இடையாம் திங்கள்

அன்பினில் நல்கும் நல்ல
வதனமும் உடையாள் பேதை. (18)

கற்பினைப் படையாய்க் கொண்டு
கல்வியைச் செங்கோ லாக்கிப்
பொற்பெனும் அரசுக் கட்டில்
பொலிந்திட அமர்ந்தாள், கிள்ளை.
நற்றவம் குடியாய் நின்று
நல்லவள் ஏவல் கேட்ட
பெற்றவர் பெற்றதா லாம்
பெரும்பயன் பெற்று நின்றார். (19)

பைந்தமிழ் ஆர்வம் பொங்கிப்
பரந்திடும் நெஞ்சம், அன்புத்
தந்தையும் தாயும் வாழ்ந்த
நாடெனக் கருதும் சிந்தை,
வந்தவர்க் களித்து வாழும்
வாழ்க்கையிற் றிளைத்த பண்பு
இந்தநல் மூன்றும் சேர்ந்தே
மலர்விழி அமைந்தாள் மன்னே. (20)

### 4. நன்மணம் புணர்த்தல்

மண்ணிலும் விண்ணிற் றானும்
மலர்விழி போலும் மங்கை
உண்மையில் இலளா மென்று
உணர்ந்தவர் குமரிக் கேற்ற
அண்ணலும் உளனோ என்று
அயிர்த்திடு காலை ஆங்கே
மண்ணினை அளந்த மாலிற்
சாத்தனும் உளனை ஓர்ந்தார். (21)

நம்பியின் பெற்றோர் தாமும்
நங்கையின் தகைமை தேர்ந்தார்
தம்முடை கிளையோ டோர்நாள்
மலர்விழி குரவர்ச் சார்ந்து
அம்புய முகத்தா ளைத்தம்
அருமைசேர் புதல்வர்க் கேற்கும்
செம்மையாம் விழைவைக் கூற
அன்னவர் உவகை கொண்டார். (22)

மங்கல நன்னாள் ஒன்றில்
மலர்விழி சாத்தன் மன்றல்
எங்கணும் நிகழாச் செவ்வி
இயல்பினில் நிகழ்ந்த தன்றே
பொங்கிய உவகை துள்ளப்
பூங்கொடி செம்மல் அன்பு
தங்கிய வாழ்வை ஏற்றுத்
தரணியில் மகிமை உற்றார். (23)

**5. காதல் வாழ்க்கை**

வெண்ணிலா மலரின் தேறல்
விருப்புடன் மாந்தி யின்பப்
பண்ணிசைத் தலையும் தென்றல்
பழகிப்பைம் பொழில்கள் கண்டு
தண்ணிய சுனைகள் ஆடித்
தலைமையாம் இன்பம் பெற்று
அண்ணலும் அரிவை தானும்
உயிரினல் ஒருவ ரானர். (24)

கண்ணினை இமையைப் போலும்
கன்றினைக் காரா போலும்

மண்ணினைச் சோழர் போலும்
மங்கையைக் கற்புப் போலும்
எண்ணுடைத் தமிழ்ச் செல்வத்தை
ஏறனை தமிழர் போலும்
பண்ணுடை மொழியாள் அன்பற்
பரிவுடன் பேணி வந்தாள். (25)

விருந்தென வந்தோர்க் கெல்லாம்
விழைவுடன் உணவைத் தந்தும்,
பொருந்திய கிளைகட் கெல்லாம்
போற்றலும் அன்பும் தந்தும்,
வருந்திவந் தடைந்தோர்க் கெல்லாம்
வாழ்வினை அளித்தும், கொண்ட
அருந்திறற் கணவற்(கு) ஏற்றின்
பீடுடை நடையும் தந்தாள். (26)

## 6. சீராளன் பிறப்பு

ஆண்டுகள் ஒன்றை யொன்று
அடுத்தடுத் தணைந்தே சென்ற
வேண்டிய இன்பம் யாவும்
விழைவுறத் துய்த்தார். காதற்
றூண்டிட அரிய பவ்வம்
தன்னிடை மூழ்கிப் பெற்ற
காண்டகு மணியைப் பாவை
கருவினில் வளரக் கண்டாள். (27)

தாய்மையின் குழைவை நெஞ்சில்
தாங்கிய வகையால் மேனி
தூய்மைசேர் எழிலைப் பெற்றுத்
துலங்கிற்றுச் சிந்தை யெங்கும்

பாய்ந்திடு வெள்ளம் போன்று
பாலகன் நினை வோடிற்று
வேயனை தோளாள் பெற்றி
வித்தகற் குவகை நல்கும். (28)

காலமாம் பொழிலிற் பூத்துக்
கருகிய திங்கள் பத்துச்
சாலவே உதிர்ந்த பின்னர்ச்
சாயலில் மயிலை ஒத்தாள்
கோலநற் குமரன் போலும்
குலமணி தன்னைப் பெற்றாள்
ஞாலமே பெற்றா னகச்
சாத்தனும் உளம்பூ ரித்தான். (29)

அன்னையின் எழிலும் தந்தை
அறிவொளி கனலும் கண்ணும்,
பொன்னினைச் சிலையாய்ச் செய்த
போற்றரு வடிவும் கொண்டு
"கன்னலே! தேனே! பாகே!
கற்கண்டே! அமுதே!" என்று
சென்னியிற் பலரும் கொள்ளச்
செல்வன்வந் துதித்தா னன்றே. (30)

குலத்தினை விளக்கிப் பெற்றோர்
உளங்களில் ஒளியைக் கூட்டி
நலமெலாந் திரண்ட சீர்த்தி
நகைமலர் உதிர்த்தான் அந்த
இலகொளி குமரன் பேரும்
சீராளன் எனவே வைத்தார்
உலகுள சீர்கள் யாவும்
அவனையே அடையும் தஞ்சம். (31)

### 7. செல்வன் வளர்தல்

மறவரின் புகழும், வீர
வளவரின் கொடையும், காலன்
உறவரின் அடியார்க் குண்டாம்
துணிவதும் போலத் தோன்றல்
விறலுடன் வளர்ந்தான். ஆற்றல்,
வித்தகம், அன்பு யாவும்
பிறந்தன, வளர்ந்த கூடிப்
பெட்பினை என்னென் போம்யாம்! (32)

மலர்விழி நெஞ்சம் உற்ற
மகிழ்விற்கோர் அளவே இல்லை
கலைநிலா விரிக்கும் செல்வக்
கண்மணி அனையான் தன்னைப்
பொலனுறை தொட்டி லிட்டுப்
போற்றியே துயிலச் செய்வாள்,
"நலமெலாம் பெறுக", வென்று
நல்லிசை மிழற்று கின்றாள். (33)

#### தாலாட்டு

காலைக் கதிரவன் தோன்றிடு போது
கண்க ளாம்மலர்ப் போது திறந்து
சோலை மலரெனப் புன்னகை பூக்கும்
சொர்ணமே! என் னுளம் கொள்ளைகொ ளன்பே

மாமணி முத்திலும் நின்னொளி இல்லை
மரகதம் நின்னொளி காணிடில் நாணும்
காமரு பொன்! உனைக் காண்டிடில் என்றன்
கவலை யெலாம்பறந் தோடியே போகும். (35)

உன்னருந் தாய்இந்த வளவர்கள் நாடு
உணர்ந்திடு காத்திடல் உன்கட னாகும்.

இன்னறு பூம்பொழில் சூழ்ந்தபொன் னாடு,
இனியவ னே!யுன துயிரென எண்ணு. (36)

மழலையர், பூவையர், வாள்வலி யோர்கள்,
மன்னவர், பாவலர் நாவினில் நின்று
அழகுட னாடிடும் அந்தமிழ் பாவை
அந்தமிழே யென அன்புட னோது. (37)

அன்னை தமிழினுக் கூறுசெய் வாரேல்
அவரையுன் வேல்குடித் தாறிடல் வேண்டும்.
உன்னவர் பின்னவர் முன்னவர் என்றே
ஒருகண மேனும்நினைந் திடல் வேண்டா. (38)

கோழையாய் வாழ்வதிற் சாவினை ஏற்றுக்
குவலயம் போற்றும் அரும்புகழ் தேடு.
வாழையாய் வந்தவெம் முன்னவர் வீரம்
வளமுற என்உயி ரே!முனை வாயே. (39)

பைந்தமிழ்ப் பாகுடன் பொன்னியின் நீரும்,
பண்டைய வீரரின் நற்புகழ்த் தேனும்
இந்த உலகினில் உண்டிட வந்தாய்.
இனியவ னே!துயில் கொண்டிடல் வேண்டும்.

தூங்குக பங்கயக் கண்களை மூடித்
தூங்குக கண்மணி! தூங்குக, தூங்கு.
பாங்கினில் வீரமும் மானமும் தூங்கப்
பரிமள மே!துயில் கொண்டிடு வாயே. (41)

### 8. போர்மூளல்

ஆண்டொரு நான்கோ டாறு
அகன்றது மோர்நாள் நாட்டில்
மூண்டது வெம்போர் ஒன்னார்
முயன்றனர் முடியை வவ்வத்

தாண்டிய மானத் தாராம்
சோழரின் வீரம் எண்ணார்
ஆண்டகை வளவன் நாட்டை
அடிமைகொள் குறியைக் கொண்டார்.

முற்றியே முதிர்ந்து கூனும்
செந்நெலின் குலையைக் கண்டும்,
வற்றிடா தோடித் தேங்கும்
வளமுறை நதியைக் கண்டும்,
பற்பல பண்டம் தேக்கிப்
பாரெலாம் திரியும் கப்பல்
நிற்பதோர் துறையைக் கண்டும்
சேரலர் பொறுமை விட்டார். (43)

ஆசையாம் நெருப்புப் பற்றி
அகமெலாம் கருகப் பெற்றோர்
காசினி அனைத்தும் இந்தக்
கவின்பெறு நாட்டின் முன்னர்த்
தூசினை நிகர்க்கும் என்று
கொண்டதால் அதனைப் பற்ற
மாசிலா வளவ ரோடு
பொருதுதல் குறித்து வந்தார். (44)

**9. சோழவேந்தன் படை திரட்டல்**

மாற்றலர் நகரின் எல்லை
வந்தனை திடலாம் சேதி
ஊற்றிய விடமாய்க் காதில்
உகுத்திடச் சீற்றம் கொண்டு
கூற்றென எழுந்தான் கிள்ளி
குவலய மறியா வீரன்

காற்றெனக் கடிதிற் செல்லும்
ஏவலர்க் கினைய சொன்னன். (46)

"போரெனத் துடிக்கும் பொன்னிப்
புதல்வருக் குரைப்பீர் இன்று
ஆரென எமைநோக் காது
அணைந்தது பகைவர் கூட்டம்
கார்முகம் திருத்தி, வேல்கள்
கடுமுனை தீட்டிக் கொல்லும்
பார்களும் ஏந்தி நாளைப்
போர்க் களமணைவீர் என்றே". (46)

காவலன் உரைத்த கேட்டார்
கணமுமே தரியா ராகி
மேவினர் ஊர்கள் தோறும்
விளக்கினர், வேந்தன் கூற்றை.
ஓவிய எழிலார் மார்பும்
உற்றிடு கிளையின் கூட்டும்
பாவியல் மழலைச் சொல்லும்
மறந்தனர் கேட்டார், அன்றே! (47)

"பெற்றதாம் உடலின் பேற்றைப்
பெற்றனம் இன்றே!" என்பார்
"பற்றியே பகைவர் கூட்டைப்
பதறடித் திடுவோம்," என்பார்
"எற்றியே அடிப்போம் பந்தாய்,
எதிரிகள் தலையை" என்பார்
உற்றவர் மகிழ்வைக் கூற
உலகினில் மொழியே இல்லை. (48)

ஊரெலாம் திரளும் வீரர்
ஓங்கிய நடையும், அன்னார்

போர்க்களம் நோக்கிச் செல்லும்
பெருமிதச் செயலுங் கண்டோர்
"வீரரில் இவரை விஞ்ச
வீரரும் உளரோ?" வென்று
மார்பினிற் பெருமை மீற
மகிழ்வுடன் கேட்பர், அம்மா! (49)

### 10. சாத்தன் போர்க்கெழல்

கேட்டான் இச்செய்தியினைச் சாத்தன் வீரம்
கிளர்கின்ற நெஞ்சினிலே மானம் சேர்த்தான்
"கோட்டானைப் போற்பதுங்கி நின்றார் இன்று
கோவேந்தன் நாட்டினிலே கண்ணை வைத்தார்
கேட்டாலே எரிமலையாய்க் குமுறும் நெஞ்சம்
கிளர்போரிற் குதித்திடவே பாயும் சிந்தை
நாட்டாலே, மொழியாலே புகழைத் தேக்கும்
நற்றமிழர் வாழ்வினிலே நஞ்சைச் சேர்த்தார்.

அன்னவரைக் காலனுடை உலகிற் சேர்த்து
அழகியசெந் தமிழகத்தைக் காத்தல் செய்வேன்
என்றபல நினைவுகளை ஏந்திச் சென்றான்
எழிலான மனையாளை அழைத்தான் வீட்டில்
"கன்னலினும் இனியாளே! காதற் செல்வி!
களஞ்செல்லும் என்றனுக்கு விடையைத் தாராய்
அன்னையினுக் கிடையூறு சூழ்ந்தாரைப்போய்
அழித்துவரக் கூறுவிடை" என்றான் வீரன்.

ஊழிபல வாகநல் வீரர் தோன்றி
ஓங்கியநற் குலச்செல்வி கேட்டாள் செய்தி
ஆழியெனக் குமுறுகின்ற உணர்வைப் பெற்றாள்;
அழகுதமிழ் நாட்டினிலே ஆர்வம் உள்ளாள்

பாழினிலே மெய்யதனை வளர்த்து வீழும்
பஞ்சைகளைத் தூவெனவே வெறுக்கும் பண்பள்
"வீழினுமே தமிழ்வாழ்க!" என்று கூற
வேண்டித்தன் காதனுக்கு விடையும் தந்தாள்.

## 11. சாத்தனின் வீரஉரை

சாத்தனது ஊர்வாழும் இளைஞர் கூட்டம்
சமர்க்களத்தை அடைதற்குச் சேர்ந்தார் ஒன்று
மாத்தலை வரும் தமது வீரச்செம்மல்
வருகின்ற வழிதனிலே விழியைச் சேர்த்தார்
வேத்தியலைக் காப்பதிலே விருப்பும், நாட்டு
விறல்கூறிப் புகழ்கின்ற நாவும் கொண்டு
பார்த்திருந்தார் முன் வந்தான் வேலை ஏந்திப்
பகர்கின்றான், வீரத்தில் விளைந்த சொற்கள். (53)

பொன்னியிலே திளைத்தெழுந்த அன்புச் செல்வீர்!
புகழெனிலே உயிர்கல்கும் வழியில் வந்தீர்!
மன்னுமொரு இமயத்தின் முடியும், வேந்தாம்
வடவர்களின் மணித்தலையும், நடுங்கும் நெஞ்சும்,
உன்னவுமே அரியபல வளத்தைப் பெற்ற
உயர்வான ஈழமும், நற் கடார மண்ணும்
கன்னலுறை செந்தமிழர் புகழைக் கூறும்.
கடையவராம் இப்புலையர் அறியார், பாவம்!

புலியதற்குப் பாய்ச்சலில்லை! மீனுக் கென்றும்
பொங்கலையில் நீந்துமொரு வழக்கம் இல்லை!
வலியில்லைச் சிங்கமது அஞ்சும்! வீட்டில்
வளர்த்திடலாம் நாகத்தை விடமே இல்லை!
மலிந்தோடும் பொன்னியதில் வளமே இல்லை!
மறத்தமிழர் வீரத்தை அறிதல் இல்லை!

அலிபோலும் நெஞ்சத்தார் கூற்று மிக்கது!
  அறிந்தீரோ, இவர்செய்கை நகையே நல்கும்!
அறியாமை இருளிடையே மூழ்கும் இந்த
  அறிவிலிகள் மரணத்தில் ஒளியைக் காண்பர்.
மறவர்களாம் எமதுதிறல் முழுதும் காட்டி
  மறலிக்குப் பெருவிருந்து தருவோம் வாரீர்.
கறங்கெனவே களத்தினிலே சுழன்றும், சோரிக்
  கடலிடையே மிதந்து முயிர்குடித்தும் மாற்றார்
அறக்கெடுமோர் வழிகாணத் திரண்டே செல்வோம்
  அஞ்சார்க்குச் சாவென்ப தென்று மில்லை. (56)

நாற்றிசையும் புகழ்வீசும் தமிழை உங்கள்
  நற்றாயென் றெண்ணிமகிழ் நெஞ்சம் உண்டேல்,
மாற்றலரின் அடிகளிந்த மண்ணில் என்றும்
  மறந்தேனும் படியவிடா வீரம் உண்டேல்,
காற்றினிலும் கடிதாகச் செல்வோம் வாரீர்.
  களங்காணும் நாளேஎம் பெருநா ளென்றால்,
ஆற்றாது புறங்காட்டும் பகைவர் காட்சி
  அழகான பெருநாளின் விருந்தே யாகும். (57)

குன்றெனவே மிஞ்சியெழு தோளும், கண்டோர்
  குலைநடுங்க உருத்துவிழி விழிக்கும் கண்ணும்,
கன்றியெழு வெகுளித்தீ கனலும், மூக்கும்,
  காளையென நிலமதிரச் செல்லும் காலும்
அன்றியுமை ஒருவரையும் காணல் இல்லேன்
  அருந்தமிழின் செல்வங்காள்! விரைந்தே வாரீர்.
சென்றிடுவோம் தமிழோடு நாடுங் காக்கச்
  சேனையர்க்க புகழ்கொள்ளச் சேர்ந்தே செல்வோம்."

**12. சாத்தன் தலைமையில் வீரர் போர்க்களமேகல்**
சாத்த னாட்டு வார்த்தை நெஞ்சிற்
றாக்கி வீர மூட்டிடக்

காத்து நாட்டு வீர மண்ணைக்
    கௌவு வோரை உண்டிட
பூத்த கோப நெஞ்சி னோடு
    போகும் வீர மக்களைப்
பார்த்த பொன்னி வீர மங்கை
    பாய்ந்து பொங்கி ஓடினாள். (59)

காடு மேடு முட்டி மோதும்
    கற்கள் முட்கள் கண்டிலார்;
தேடி ஓடு வெற்றி மாதும்
    சோர்ந்து நிற்க ஓடினார்.
பாடு துன்ப தாகம் வீரர்ப்
    பார்க்க அஞ்சி நின்றன
நாடு காக்கும் சித்தம் ஒன்றே
    நாடிப் பின்னர் சென்றது. (60)

குன்று போல நெஞ் சுயர்த்திக்
    கொல்லும் வேங்கை போலவே
சென்ற வீரர்க் கண்ட நாடு
    "சேய்கள் வெற்றி காணுவர்"
என்ற எண்ணம் மிக்கு நிற்க
    இன்ப வெள்ளம் மூழ்கிற்று
மன்ற மாடு நற் றமிழ்க்கு
    மக்க ளல்ல ரோஇவர்! (61)

ஆதி யந்த மற்ற ஈசன்
    அன்பை ஒத்து எங்கணும்,
சோதி யான வேல்கள் வாள்கள்
    கொண்டு வீரர் சென்றனர்.
பேதியாத ஒன்று பட்ட
    ஒற்று மைக்கு நற்றமிழ்

ஆதி அந்த மற்ற சேனை
ஆங்கு சாட்சி பேசிடும். (62)

## 13. போர்க்களம்

திசைக ளோடு மாற்றை யொத்துச்
சென்ற சேனை ஆழியின்
மிசைக லப்ப தொத்து ஒன்று
மேவி யாங்கு நின்றது
அசைவி லாத வீர முற்று
ஆண்மை மீறு மன்னனும்
வசையி லாத சீர டைந்த
வான்படை செலுத் துவான். (63)

மண்ணில் மிக்க ஆசை கூர்ந்த
மாற்ற லர்கள் சேனையும்
விண்ணில் முட்டும் ஓசை யோடு
வேல்கள் பற்றி வந்தது.
அண்ணல் சாத்தன் மின்னல் ஒத்து
அங்கு மிங்கும் ஓடியே
திண்மை யோடு போர் புரிந்து
தெவ்வர் கூட்டை ஓட்டினான். (64)

சோரி ஓடு யானை ஒத்துச்
சுற்றி யெங்கும் சென்றுமே
[1] பாரி யோடு யானை ஏறு
பாகர் ஈட்டம் வீழ்த்தினன்
வாரி ஆழி நீரை உண்ணும்
மாமுகில் கள் மானவே
கார் முகத்தை ஏந்தும் ஒன்னார்
இன்னு யிர்கள் உண்டனன். (65)

1 பாரி — அம்பாரி

புல்லை மேவு வெண்ப னியைப்
போக்கு சூரி யன்எனப்
புல்ல ராய மாற்ற லாரைப்
போக்கிச் சீற்றம் ஆறிலான்
கல்லை யொத்து நின்ற வேழம்
காற்று வேகப் பரிகளை
இல்லை யென்று சொல்ல நின்று
ஏற்று வான்விண் ஊரிடை. (66)

## 14. சாத்தன் வீழல்

இவ்வாறு சமரிடத்து விளையாடிச்
சிறிதுமுடல் இளையா வீரன்,
செவ்வாறு நீந்தியவன் முருகனென
உடல்சிவந்தும் சோர்வைக் காணான்;
தெவ்வாறு காலற்குக் களத்திடையே
காட்டியவன், செருவில் வல்லான்
அவ்வாறு சமராடி மரணத்தைத்
தழுவிஉயர் அமர னானான். (67)

கண்டார்கள் தமிழனவன் மனவலியும்
உடல்வலியும் கறைசேர் நெஞ்சர்,
பண்போயும் அவனுடைய போர்வலியால்
மனத்திடையே உளைச்சல் உற்றார்
விண்போயும் புகழானைக் கூறுசெய
விரைந்தார்கள் வெற்றி கண்டார்!
கண்போயும் விழிநீரைச் சொரிந்தார்கள்
மறத்தமிழின் காவல் வீரர். (68)

புன்முறுவல் விளைகின்ற முகமலரும்,
உயிர்வாழும் போதார் கண்ணும்,

கன்மலைபோல் உரமுற்ற நல்லுடலும்,
அழியாநற் கவினர் மார்பும்
அன்னைதமிழ் வளநாட்டிற் களித்துஉயர்
காலனுல கணைந்தான் சாத்தன்
'என்னை! இவன் இழந்தோமே!' எனக்கருதும்
தமிழ்மறவர் ஏக்கம் கொண்டார். (69)

## 15. மாலை அணைதல்

பண்ணூறு தமிழ்வீரர் பரிபவமும்,
ஒன்றுரின் பகரவொண்ணு
விண்ணூறு ஜெயகோஷம் எழுதலுடன்
கண்டஒளிக் கதிரோன் "என்றன்
கண்ணூறு பட்டதனுல் மரணமதைக்
கண்டனனே சாத்தன்" என்று
எண்ணூறு நெஞ்சினனாய்த் துயரத்தை
அடைந்தொளியைக் கரந்தான் மன்னோ.

## 16. திங்களின் தோற்றம்

சாத்தனது மரணத்தால் தமிழ்வீரர்
அடைகின்ற சலிப்பைப் போக்கி
வேத்தியலும் தாழியலும் மறவியலும்
காத்தலினை விரும்பல் செய்யப்
பார்த்திவனும் வளவனுடை மனத்தகத்தே
பரந்திடுமோர் உறுதி ஒத்துப்
பூத்தெழுந்த நிலாமலரும் விண்ணிடையே
ஒளிமணத்தைப் பரப்பிற் றன்றே. (71)

## 17. மலர்விழி கணவன் வீழ்ந்த செய்தி அறிதல்

வீந்த வாற்றையும், களத்தினிற் சமர்விளைத் ததையும்,
ஏந்து வேலினுற் பகைவரை உயிர்எடுத் ததையும்,

போந்த வாற்றையும், மரணத்தின் வாயிலிற் பொலிவும்
காந்தளங் கரக் கனியினுக் குரைத்தனர் கரவார்.

கேட்ட நன்மலர்த் திருவினை நிகர்த்தவள் கேடாம்
வாட்ட முற்றிலள், விழியினில் நீரினை வழிக்காள்
வேட்ட நற்புகழ் விளைத்திடு வீரனை வேட்கும்
கோட்ட மற்றிடு பேற்றினால் மகிழ்வினிற் குளிப்பாள்

ஆண்டு சில்லதாய் உலகிடை வாழ்வதில், அமரர்
வேண்டு நற்புகழ் விளைத்துமண் ணுலகினை விடுத்து
மாண்டு வீரமாம் சொர்க்கத்தில் மன்னுதல் குறித்தார்
ஆண்ட நற்குடி வந்தவள் வேறெதை அறிவாள்? (74)

தேனிகர்த் ததாம் மொழியினை மிழற்றிடும் செல்வி
வானுயர்த் ததாம் தமிழரின் புகழினை வளர்க்க,
கானுயர்த் ததாம் சீயமாய்க் களத்தினைக் காய்ந்த
கோனிகர்த்ததன் கொழுநனை நினைந்துணர் வுறுவாள்

ஆய்ந்த கொள்கையால் அறிவினின் முடியினி லமர்ந்தாள்
பாய்ந்து செல்லுமோர் வீரமாம் வெள்ளத்திற் பழகி
மாய்ந்த நற்றிறல் ஒருவனின் மனைவியாம் திறத்தைத்
தோய்ந்த அன்பினில் நினைபவள், இனையன தொடுப்பாள்

“வாங்கி ஒன்னலர் உயிரினை வதைத்துடல் வருத்தி
ஓங்கு நற்புகழ்க் குரியராய் மறைந்தனர், உயர்ந்தார்.
ஆங்கு காட்டிய அருந்திறல் காண்டிடல் அற்றேன்
பாங்க ருற்றுயர் சமரினை விளைத்தநீர் பவத்தர். (77)

மன்னு மெம்முடை மொழியினை, நாட்டுடை மதிப்பை
அன்னை தந்தையின் வாழ்வினை, அறத்தினை, அருளை
உன்னியே தொடர்ந் தமரினை விளைத்தலே உயர்வாம்
இன்னல்வந் துறத் தொடரினும் இழந்திடீர் உரத்தை.

முன்பு நம்குலம் வகுத்ததாம் வழியினில் முனைந்து,
வன்பு செய்திடும் வயிரியர் வாழ்வினை வறட்டி,
அன்பு செய்திடும் அன்னையை அரியணை அமைப்பீர்;
என்புமுற்றவர் உயர்வினுக் களிப்பவர் உயர்ந்தோர்.

அன்னை வேண்டிடில் இன்னுயிர் அளித்தலு மரிதோ?
பின்னை வாழ்வதிற் பேறிலை வசையெனும் போதம்
என்னை ஆண்டவர் உணர்ந்தனர், உயிரினை அளித்தார்
அன்னை யான்என தரும்பெறற் குழவியு மளிப்பேன்

வாழி! நற்றமிழ் வளமுறை அரிவையாள் வளரும்
ஆழி சூழ்ந்திடு தமிழகம் அரும்புக ழமர;
வீழி னும்பெரு விறலினை விளைத்துயிர் விடுக!
ஊழி பற்பல உமதிசை உரைத்திடும் உலகம்'' (81)

கேட்ட வீரரின் உளமெலாம் பெருமையிற் கிளர்ந்த
கோட்டை ஒத்துயர் வலிபெறு குமரனும் குலைவில்
வேட்டு நின்றனன் செருக்கள மனைவதை விரைவில்
காட்டு மோர்குடி வீரத்திற் கிதுவென்பர் கவிஞர். (82)

### 19. சூரியோதயம்

மங்கை இன்னருள் துறந்துநின் றடையலர் மடவார்த்
தங்கு மங்கல நாணதைத் துறந்திடத் தமிழர்
பொங்கு நெஞ்சினில் வெம்மையைப் புகுத்துத லொத்து
கங்கு லுண்டுயர் கடுவெயில் எழுப்பினன், கதிரோன்.

வான மேத்திட வருபுகழ்க் கதிபராம் வளவர்
ஊன முற்றிடா துயர்ந்திடல் மனத்திடை ஒளித்து
ஏனை உன்னலர் இலரெனத் தமிழர்செய் கோஷம்,
வானை முட்டிடும் காட்சியைக் கண்டிட வந்தான். (84)

மேற்கு வானிடைப் படையெடுத்தணைவதோர் மொய்ம்பர்
தேக்கு சோரியோ! மறவரின் குருதியோ! செம்மை

பார்க்குவம் மெனப் பகர்ந்திடு கிழக்கினில் வந்து
போக்கி நின்றனன் கதிரொளி போற்றிசெய் பகலோன்

**20. மலர்விழி சீராளனைப் போருக்கனுப்பல்**

காலையிற் கதிரோன் தோற்றம்
கண்டதும் உயிர்ப்பை உற்றாள்
வேலையில் முளைக்கும் நல்ல
வெண்ணிலா முகத்தள், அன்புப்
பாலனைத் துயிலை நீக்கிப்
பரிவுடன் முழுக்கு மாட்டி
வால்வளை அனைய வெண்மை
வரித்துகில் அணிவாள், நன்கு. (86)

கூந்தலை நீவிக் கட்டிக்
கோடிய வில்லும் பூட்டி,
வேந்தனை, நாட்டைக் காக்க
வேண்டியே வேலுந் தந்து
"வீந்திடல் வரினும் உன்றன்
விறலினிற் றவறல் வேண்டா,
ஓர்ந்தனை முன்னோர் வீரம்
உளத்தினிற் கொண்டே"கென்றாள். (87)

மாண்டநற் றமிழின் வீறும்,
மறவரின் மொய்ம்பும், பண்டை
ஆண்டநல் மன்னர் பெட்பும்,
அரிவையர் உணர்வும், அன்னோர்
வேண்டியே புகழிற் காக
உயிரையும் அளிக்கும் பண்பும்
தூண்டிட எழுச்சி பொங்கத்
தோன்றலுக் குரைத்தாள் பாவை. (88)

"மைந்த! நின் வாழ்வில் இந்நாள்,
மறந்திட முடியா நன்னாள்.
இந்தநல் மண்ணிற் றோன்றி
எய்திய பயனும் பொன்னாள்.
அந்தமில் புகழைத் தேக்கும்
ஆக்கமே நிலையாம், என்று
சிந்தையில் உணர்வைக் கொண்டு
சேர்ந்திடு களத்தை" என்றாள். (89)

கோலமா மஞ்ஞை ஏறும்
குமரனை நிகர்த்த சீரான்
சாலவும் மகிழ்வும், வீரம்
தாங்கிய நெஞ்சு மாகி
மாலையை அணிந்த தோள்கள்
மண்ணுற வீழ்ந்தே அன்னை
காலினை முடியிற் கொண்டான்,
களத்திடைக் கடுகிச் சென்றான். (90)

செல்பவன் விறலிற் றந்தை
பெருமித நடையைக் கண்டாள்
"நல்லவன் மானங் காப்பான்
நமக்கிதில் ஐயம் வேண்டா
வல்லதாம் புலியின் தோன்றல்
வகையற்றுப் புல்லுண் ணாதே.
எல்லையில் புகழான் மைந்தன்"
இசைபெறல் இயல்பென், றோர்ந்தாள்.

## 21. சீராளனின் சிறப்புறு வீரம்

மறவர்கள் நிறையும் பொருபடை இடையில்
மருவிய பெருசினத் துடன டைவான்;

உறவரு பகைவர் அதிசயித் திடவே
ஒளிறிய சமரினை விளைத்திடுவன்;
கறையறு திறலிற் குலவரை யெனவே
கலங்கலை அறிந்திலன் சிறுவனவன்;
சிறைபடு மடிமைத் தனமதை இடியாச்
செறுத்திடு முயர்குணச் சேயிவனே. (92)

மடமட வெனவே பகைமுறிந் திடவே
மாபெரு வேலினை ஓட்டிடுவான்;
கடகட வெனவே மறநகை யுடனே
களமதி லெங்கணு மலைந்திடுவான்;
தடதட வெனவே பொருகளி றுதறித்
தரையினிற் சரிந்திட வகைசெய்வான்;
அடஅட இவனுடை விறலினை உரைக்க
அமிழ்துறழ் தமிழினும் மொழியிலையே.(93)

கொடுமை இளைத்திடு மெதிரிகள் தலைகள்
குவயல மங்கையைத் தழுவினவே.
படுமர முறிந்து சரிந்திடல் போலவர்
பாறியே வீழ்ந்தன நல்லுடல்கள்.
கெடுமதி கொண்டிடு இதயங்கள் அங்குறை
கொடுநரிக் கூட்டத்திற் கிரையான.
அடிகளம் அலைந்து தமிழரைக் கோறலை
எண்ணியர் காலனை எய்தினரே. (94)

குருதி வழிந்து மிகுந்து உறைந்ததைக்
கோமக னன்னவன் எண்ணிலனே.
பெருகி வரும்படை முடுகியே சென்றுமே
பெருவலி ஓட்டிடல் குறிக்கொண்டான்
உருகிய நெஞ்சராய் மறவர்கள் கண்களில்
ஒளியுடன் அவன்செயல் கண்டார்கள்.

விரகினி லின்றிவன் உயிரினை உண்டிடல்
வேற்றவர் நெஞ்சினிற் கொண்டார்கள்.

### 22. சீராளன் வீழல்

பாரதப் போரிற் பார்த்தன்
பாசத்தில் விளைந்த சேயை
மாரதர் வளைத்துக் கொன்று
மானத்திற் கூறு செய்தார்
வீரனும் சாத்தன் சேயை
வீணராம் பகைவர் கூட்டம்
கூர்நுதி வேலாற் கொன்று
கோடினார் வீரம் இன்றே. (96)

பாலனென் றெண்ணார் ஆவி
பதைத்திலர், கொல்லும் போது
காலனிற் கொடிய ராகிக்
கறையினை முடியப் பெற்றார்
"ஆலமும் நாணும் பொல்லா
அலிகளிந் நாய்கள்," என்றே
ஞாலமும் உரைக்கும் இனக்
கொடும்பெய ரடைந்தார் பேய்கள். (97)

வீழ்ந்தனன் வீரன் வாயில்
விளைந்தது முறுவல் "பாரில்
வாழ்ந்ததன் பயனைப் பெற்றேன்.
வளமுறை தமிழைக் காத்தேன்
தாழ்ந்தனர் பகைவர்" என்றே
தருக்குற்றுக் கூறிச் சென்றான்
ஆழ்ந்தபேர் உவகை யோடும்
அமரரும் அவனைப் பெற்றார். (98)

கண்டனர் வீரர் இந்தக்
காட்சியை நெஞ்சிற் சீற்றம்
கொண்டனர் புலியைப் போலக்
குதித்தனர் பகைவர் இட்டம்
மண்டியே திணிந்து செத்து
மாய்ந்தது புல்லர் கூட்டம்
கொண்டனர் தமிழர் வெற்றி
கொதித்தவர் குலைந்து கெட்டார். (99)

பெற்றனர் தமிழர் வெற்றி.
பேடிகள் தொலைந்தே போனார்
உற்றபோர் இதுவே என்று
ஓதிற்று விண்ணும் மண்ணும்
கற்றநற் கவிஞர் பாடக்
கவினுறு வெற்றிச் சங்கம்
வெற்றியை முழங்கிச் சொல்ல
வீரர்கள் மகிழ்வை உற்றார். (100)

23. 'சிராளன் முதுகிற் காயம்பெற்றான்' என்ற செய்தி

பாற்கடல் கடைந்து பெற்ற
பரிசதாம் அமிர்தம் தன்னில்
ஊற்றிய விடமே போன்று
ஒருவன் வந்துரைப் பானின்று
வேற்படை வீர னாகும்
விறலரும் சாத்தன் சேயும்
மாற்றலர் முதுகிற் றந்த
காயத்தால் இறந்தா னென்றே. (101)

படையணி முன்னர் நின்று
பகைவரை வதைத்த வீரர்

உடைந்திலாக் குமரன் உண்மை
 உணர்வரே. ஆயின் அந்தப்
படையவர் புண்கள் ஆற
 மருந்தினை இடுதற் சென்றார்
அடைந்தவிச் செய்தி கேட்டார்
 அவ்வுண்மை அறியார், பாவம்! (102)

"மறப்பெருந் தமிழர் வீரம்
 மங்கிற்றே, அந்தோ!" என்பார்
'உறப்பெருஞ் சமரைச் செய்த
 உத்தமன் மகனோ, இன்று
இறந்தவன் முதுகிற் பெற்ற
 வடுவினால்?" என்றயிர்ப்பார்
"அறப்பெருந் தாழ்வு சாத்தன்
 அருங்குல முளைக்கே" என்பார். (103)

இவ்வணம் எண்ணும் வீரர்
 இறையினும் தரியா ராகி
"எவ்வணம் சமரைச் செய்தான்
 என்குலக் குமரன்," என்றே
செவ்விதில் அறிதல் எண்ணும்
 சேலுறழ் விழியாள் மாட்டுக்
கவ்விய சீற்றம் விஞ்சக்
 கழறினர் அறிந்த சேதி. (104)

**23. மலர்விழி செய்தி கேட்டு வருந்துதல்**

தழலினில் இயம் காய்ச்சித்
 தாங்கரு வெம்மை யோடு
அலையுறை நாக பாம்பின்
 அருவிடம் சேர்த்தே ஒன்றாய்க்

குழையுறு காதில் ஊற்றக்
கொண்டதாம் துன்ப முற்றுப்
பிழையறு குலத்தின் மானம்
பொய்த்ததற் குளேகின் றாளால். (105)

"தேனினில் விடமோ, இன்பத்
தீந்தமிழ் வழுவோ, நன்கு
வானினில் ஒளிரும் சேயோன்
கதிரினிற் கறையோ, பெற்ற
மானமார் வயிற்றிற் றீதோ?
மறவனின் குலத்திற் பொய்யோ?
ஈனமார் இந்தச் செய்கை
எவ்வழி அணைந்த," தோராள். (106)

## 25. மலர்விழியின் சீற்றம்

மறவரு மேத்திடு மலர்விழி யுற்றிடு
மாபெருஞ் சீற்றத்தை என்னென்போம்
உறுபெருந் தீமலை உமிழ்பெருந் தீயென
ஓங்கிய வீரவுணர் வோடு
வெறுப்பெனும் காற்றது சுடரதை ஏற்றிட
வெந்து கனன்று மூயிர்ப்பாளும்
உறவரு வீரர்கள் உளமதில் உற்றிட
ஓங்கிய நன்மொழி சொல்வாளே. (107)

"பெறுமொரு நற்பய னுறுவ னெனப்பெரு
மகிழ்வினை யுற்றனன் மதியற்றேன்
குறுமதி யுற்றவன் அடையலர்க் கண்டொரு
குறிப்பினை விட்டனன் இகழ்வுற்றான்.
கறையறு நற்குல மடைபெறு நற்பெயர்
கடையனை எண்ணிட வையாதோ?
இறைவனே! யிப்படி ஒருமக னுற்றிட
எனது குலம்உறு பவமேதோ?" (108)

"வளமுறை நற்றமிழ் வளவரின் நற்புகழ்
வாழ்ந்திட உற்றுயி ரளியானேல்
களையென வந்திடு புலையரை நெஞ்சொடு
கல்லி எறிந்திட மாட்டானேல்
அளையுறு பாம்பினை நிகர்த்துயிர் வாழ்ந்தவன்
அன்னவன் உயிர்குடித் தேனென்னும
விளைபுகழ் பெற்றிட அருகதை யற்றனன்
வேறினிப் பாரினில் வாழ்வேனோ?" (109)

"களமதிற் பேடியின் உடலினைக் கண்டவன்
காயத்தை முதுகினிற் பெற்றானேல்
உளமுறு பாசத்தில் அவனுயிர் காத்திட
உருகியே நான்அளி மூலையதனை
ஒளிபெறு வாளினல் அறுத்திடுவேனிது
உண்மையிலே இன்றுசெய்யேனேல்
விளங்கிய நாட்டினிற் கறைதரு வேசியர்
பெற்றிடு நரகினை அணைவேனே." (110)

## 26. மலர்விழி களஞ்செல்லல்

செந்தழலைத் தேக்குமிரு விழிக ளோடும்
சேதியினல் துடிதுடிக்கும் நெஞ்சி னோடும்
அந்தமறு சீற்றமுறு வதனத் தோடும்
அவிழ்ந்துவிழு கருமேகக் கூந்த லோடும்
வெந்துவரு நெடுமூச்சு விரிமூக் கோடும்
வேகத்திற் காலனைய கால்க ளோடும்
இந்தவுல கறியவரும் சக்தித் தெய்வம்
என்றென்றே ஊரேத்தச் சென்றாள் மாது.

மறவீரர் வியப்பாலே விரிந்த கண்ணும்,
மடவார்கள் தொழுதேத்தக் கூம்பும் கையும்
இறவாத புகழாரும் கவிதை செய்யும்
ஏத்துகவி வாணரவர் போற்றும் வாயும்,

உறவாக நின்றபொதி தழுவி வந்த
  உயர்வான தென்றலுடை மணமும் ஆங்கே
விறலான மங்கையவள் பின்னர்த் தங்க
  வெம்மையொடு செல்கின்ருள் மானம் காப்பாள்

ஒளியாரும் வாளதனைக் கையி லேந்தி
  உள்ளத்தில் உறுதியினைச் சிறப்பாய் ஏந்திக்
களிபேராம் மானத்தைக் கருத்தில் ஏந்திக்
  களமடைவாள் மறக்குலத்து மணியாம் பூவை
வளிபேசும், வானமுறை திங்கள் பேசும்
  வானவரும் பேசிடுவர். மூவர் வாயும்
கிளிபேசச் சொல்லளிக்க கிளர்பொற் செல்வி
  கேடற்ற வீரத்தின் திறத்தைக் கூறும். (113)

வீரமுறை மறவர்பகை யுடலிற் பெற்று
  விருப்புடனே நல்குமொரு குருதி யாடி
வாரணங்கள் பொருபரிகள் உடலாற் செய்த
  வனப்புறுமோர் அரியணையின் மீதே ஏறிச்
சோரியுணும் நரிகளங்கு துதிகள் பாடச்
  சோர்வடையாப் பேய்களவை நடன மாடப்
பேரொளிசேர் *வெண்குடையாய்த் திங்கள் நிற்கப்
  பேருற்ற கொற்றவையாள் களத்தைச் சேர்ந்தாள்.

*கொற்றவை + ஆள் = வெற்றித்தெய்வம் ஆட்சிபுரியும்.

### 27. மலர்விழி சீராளன் உடலைத் தேடல்

களமதிலே குவிந்திருந்த பிணக்குன் றெங்கும்
  கருத்துடனே தேடுகின்ருள் புதல்வன் மெய்யை
உளமதிலே எழுந்தோங்கி உயரும் சீற்றம்
  உடலதனில் நடுக்கத்தை ஊட்டும் போதும்
வளமுற்ற நன்மறவர் குலத்தில் உற்ற
  வலிமைதரும் ஊக்கமே வழியைக் காட்ட
அளவற்ற பிணக்கூட்டம் தேடித் தேடி
  அலுத்தலுத்தும் முயற்சியினிற் சோராள்பாவை

ஆறாக ஓடுகின்ற குருதி நீந்தி,
　　அமராற்றி மடிகளிறுக் குவியல் தாண்டி
வேறாகக் கிடந்தபரிக் கூட்டம் நீங்கி
　　வேல்வாள்கள் முட்களாய் உறுத்தல் தாங்கி
மாறாத புகழுற்ற மறவர் கூட்டில்
　　மனமயராள் நின்றுதன் மகனைத் தேடி
ஆறாத புண்ணுற்றாள் நெஞ்சில் மெய்யோ
　　அயர்ந்தயர்ந்தும் தேடலிலே முயலச் செய்யும்.

## 28. சீராளன் சீர் காண்டல்

கண்டனள் புதல்வன் மெய்யைக்
　　கதிரொளி படரும் நெஞ்சில்
உண்டாகல் விழுப்புண் ணோடும்
　　ஓங்கிய மூறுவ லோடும்
மண்டகற் குலத்தைக் காத்து
　　மடிந்திடு மறவற் கண்டாள்
கொண்டதாம் சீற்றம் ஆறக்
　　குவலயம் பெற்றா ளொத்தாள். (117)

பெற்றதிற் பெரிதாம் இன்பம்
　　பீறிடும் உள்ளத் தோடும்,
உற்றநற் குழவி வீறு
　　உதவிய பெருமை யோடும்,
வற்றலை அறியாத் தாய்மை
　　வழங்கிடும் ஆர்வத் தோடும்
இற்றைநாள் உற்ற துன்பம்
　　ஏகிட நிமிர்ந்தாள் நெஞ்சம். (118)

தழுவியே மைந்தன் மெய்யைத்
　　தாங்கிய கைய ளாகி
எழுந்தனள், ஆர்வக் கண்ணீர்
　　இழிதரும் விழிக ளோடு

"உழுவலன் புறையும் ஊரீர்!
உத்தமன் திறலைக் காணீர்!
வழுவிலை அவன்றன் சாவில்
வானமார் புகழை உற்றான்." (119)

என உரை மொழிய ளாகி
இகல்மறத் தமிழர் வாழும்
வனப்புறை ஊரிற் புக்கு
வளம்நிறை வீதி யெல்லாம்
மனத்துறு வீர வார்த்தை
வழங்கினள் மறவர் ஆர்த்தார்.
"அனையுன துதரத் துற்ற
அண்ணலே பெரியன்" என்றார். (120)

மங்கையர் ஆர்த்தார், நின்ற
வானமும் மண்ணும் ஆர்த்த
பொங்கிடு பொன்னி ஆர்த்தாள்
பொருப்பும் நற்காலும் ஆர்த்த
"எங்குறை வாரே இந்த
இகலுறை தாயைப் போலும்
நங்கை"யென் றார்த்தார் உண்மை
நசையறு வீரம் கண்டே. (121)

வாழிநற் றாயின் வீரம்
வளர்தமிழ்ப் பண்பு வாழி!
வாழிசெந் தமிழர் நெஞ்சம்
வளமுறை பொன்னி வாழி!
வாழிநல் வளவர் செங்கோல்!
வாங்குநல் வீரம் வாழி!
வாழியித் தாயை ஏத்தும்
வையமும் அறமும் வாழி! (122)

19)

20)

21)

22)

கவிநாவானில்
இணையற்ற சோதிகள்
**யாழ்ப்பாணன்**
புனைந்துள்ள

## மாலைக்கு மாலை

புதுமணத் தம்பதிகளுக்கேற்ற சிறந்த பரிசுப்புத்தக
விலை ரூபா. **2-50**

## கவிதைக்கன்னி

ராஜாஜி, நாமக்கல் கவிஞர், கல்கி ஆகியோரின்
முன்னுரைகளுடன் கூடியது.
விலை ரூபா **2.00**

## பாலர்கீதம்

குழந்தைகள் குதித்துப்பாடும் பாடல்கள் பல
கொண்டுள்ளது.
விலை சதம் - **75**

## முல்லைக்காடு

ஜீவா - யாழ்ப்பாணன்
கவிதைக் கடிதங்கள் கொண்ட ஓர் புதுமை இலக்கியம்
விலை ரூபா **1-50**

விரும்பிய நூல்களுக்கு போஸ்டல் ஓடர் அனுப்புக
தபாற்செலவு இனாம்!

**வடலங்கா புத்தகசாலை**
பருத்தித்துறை